திருவாரூர் தம்பிரான் தோழர் தமிழ்ச்சங்க வெளியீடு—1.

# தம்பிரான் தோழர் தவவாழ்க்கை

(ஞானனூற் பிரிவு—2)

இஃது

விபூதிவிளக்கம் ; உருத்திராக்க விளக்கம்; நித்தியகரும விளக்கம் ; இங்கிதமணவியல் ; மகேசுர பூஜைவிளக்கம் ; ஆனைந்து ; சிவஞானபோத முதனூல் விளக்கம் ; சிவலிங்க உருவ விளக்கம் ; தமிழ்மொழிச் சிறப்பு சித்த வைத்திய சரித்திரம் ; நேற்குன்றவானர் சரித்திரம் ; துடிசைப்புராணம் முதலிய பல நூல்களை வெளியிட்டவரும்,

ஆதி சைவப் பரம்பரையில் வந்தவருமாகிய

துடிசைகிழார்

## அ. சிதம்பரனர் அவர்களால்

எழுதப்பட்டு

—: திருவாரூர் :—

தம்பிரான் தோழர் தமிழ்ச்சங்கத்தாரால்

வெளியிடப்பட்டது.

திருவாரூர்

கிருஷ்ண பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1935.

விலை ரூ. 0-4-0.

உ

சிவமயம்.

# பதிப்புரை.

———: 0 :———

எல்லாம்வல்ல இறைவன்றன்னருளாற்றோற்றுவித்த நால்வகையோனி எழுவகைத்தோற்றம், 84நூறாயிரம் யோனி பேதங்களுள்நித்தியவநித்தியங்களைப் பகுத்தறியும் ஆறறி வினராய மக்கள் யாக்கையே மேன்மையுடைத் தென்பதும், அஃதும் பரவை வெண்டிரை வடகடலுட் படுநுகத்துளையுள் திரைசெய்தென்கடலிட்டதோர் மெல்லிய கழிபுகுந்தாற்போல அருமையுடைத்தென்பதும், அதுவும் புன்னுனிப்பனி வெங்கதிர் கண்டாற்போலழியும் ஆற்றல் பெற்றதென்பதும் எய்தற்கரிய யாக்கை தனக்கெய்திற்றென்றால் அதுகொண்டு செய்தற்கரிய வறங்கள் பல செய்து துயர்கூர் பிறவியில் நின்று உய்தற்கொருமை பெறவேண்டுமென்பதும், பேரஞரிடும்பையெல்லாம் பிளந்திடும் பிறப்பு நீக்கும், ஆரமிர்தரிற் பெற்றும் அதன் பயன்கோடல் தேற்றாது, ஒருமைம்பொறியு மோம்பியுளபகல் அவமே போக்காது, மறுமைக்குவித்து மயலின்றிச் செய்து சிறுமைப்படாதே வாழவேண்டுமென்பதும், அவ்வித்து யாதோவெனின், பிறப்பு மூப்பு பெரும்பசி வான்பிணி இறப்பு நீக்கி இன்பந்தருவானாகிய ஈசனையும் அவனடிக்கன்பு பூண்டொழுகுமடியார்களையும் மனமொழிமெய்களால் என்றும் நன்று வழிபடல் வேண்டுமென்பதும், நீங்காத அவ்வழிபாட்டிற்கிலக்காயுளது, கற்றல் கேட்டல் தெளிதலென்பதும், அக்கல்வியும் பற்றற்றபரமனாலும், அவனருள் பெற்று காமம் வெகுளி மயக்கமற்ற அடியார்களாலும் இயற்றியதென்பதும், செவ்விதி னுணர்ந்து சிற்றின்பத்திற்கேதுவாகிய செல்வமும் அதனை அனுபவிக்தும் யாக்கையும் நிலையெனக்கண்டு மயங்கினார்க்கு, அம் மயக்கம் நீங்கியுண்மை யுணர்ந்துய்யுமாறு கருதி, பொன்னு மெய்ப்பொருளும் போகமும் புணர்ப்பானாகிய புற்றிடங்கொண்ட புனிதன்கழலே போற்றிவாழ்ந்த தம்பிரான் றோழர் தவவாழ்க்கையின் உட்பொருளை யுணர்ந்தோ ருணருமாறு உள்ளங் திகழும் ஓங்கிய வன்பால் நன்கு விரித்துரைத்த நம் துடிசைக்கிழாரவர்கள் பேருதவி அறிவாளர் அகத்திடத்தே அனுதினமும் அமைந்து விளங்கும் அருமையுடைத்து.

G. சோமசுந்தர தேசிகர்,

சங்க அமைச்சர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

பேரன்புடையீர் !

சமய குரவர்கள் நால்வரில் சுந்தரமூர்த்தி நாயனர் சரித்திர ஆராய்ச்சியின்கண் சைவ உலகம் கூட, நாயனரது உண்மை விளக்கம் அறியாது பிதற்றுவதை ஒழித்து சைவசமய உண்மைப் போதம், சிவபெருமான் தோழமை முறையில் உணர்த்த உணர்ந்து "யாவும் அரன் செயலாம்" என்ற நிச்சயத்தைக் கடைப்பிடித்தவராய் தான்பெற்ற இன்பம் உலகமும் அடைய கருணைகொண்டு பரனருளின் வசமாகிச் செய்த பணியே யாகும் என்பதை வெளிப்படுத்த அடியேன் சுந்தரர் திருவடித் தியானத்துடன் வெளி வந்தேன். ஆன்ரோர்களால் ஆளப்பட்ட செயல்கள் என்ன, திருவாய் மலர்ந்த பாமாலைகள் என்ன, இவைகள் உட்குறிப்பு வெளிக் குறிப்பு என்ற இரண்டு பொருள்களை அடக்கியுள்ளன. பெரிய புராணத்தில் ஒரு விடத்தில், "எடுத்த அத்திருப்பதிகத்தின் உட்குறிப்பு என்று கூறப்பட்டதிலிருந்து வெளிக் குறிப்பு முதலில் சுலபமாய் உணரப்படவேண்டியதென்றும் பிறகு உட்குறிப்பு ஆராய்ச்சியின்கண் தெளிவு பட்டு அனுபவ முறைக்கு ஈட்டப்படுமென்பதும் அறியத்தகுந்தது. இராமாயணம், பாரதம்என்ற இதிகாச நூல்கள் மேற்சொன்ன இரண்டு குறிப்புகளை அடக்கியுள்ளதென்றும், சரித்திரம் உணர்ந்து பக்தி ஜெனித்து, பிறகு, ஞானர்த்தம் அல்லது தத்துவார்த்தம என்ற இரகசியப் பொருளை அன்பர்கள் வெளி யிட்டிருப்பதை எல்லோரும் அறிவீர்கள். அந்த வகைபற்றி சுந்தரர் தவவாழ்க்கை என்ற ஓர் வியாஸத்தை சுந்தரமூர்த்தி நாயனர் சரித்திர ஆராய்ச்சித் துறையில் சீமான் துடிசைக் கிழார்மெய்ப்பாடுபட்டு வெளியிட்டதாகும்.

(1) "சைவத்தின்மேல் சமயம் வேறில்லை."

(2) "ஞாலமுய்ய நாமுய்ய" பெரியபுராணம்.

(3) "செப்பரிய சமையநெறி" தாயுமானவர்.

மேற்கண்ட பாடல்களால் ஊகிக்க நிற்கிறது பூண்டு ஒழுகப் படவேண்டியது சைவ சமயமே ஆகும் என்பதும், அதனல் பிரதி பாலிக்கப்படும் சிவபெருமானே முழுமுதல் கடவு

ளாவார் என்பதும், அக்கடவுளால் சுட்டிக்காட்டிய நெறியாகும். சரியை கிரியையோகம் ஞானம் என்ற நான்கு மார்க்கமாகும் என்பதும், இம் மார்க்கங்களை பிரதமாரம்பமாக ஸ்தாபிக்கப்படவும் அனுஷ்டிக்கும் முறை காட்டவும் அவைகளைப் பின்பற்றி உலகம் உய்யுமாறு அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வரை சிவபெருமான் தர, அவர்கள் இப்பூவுலகில் அவதரித்து விஞ்ஞானகலர் பிரிவில் தலை நின்று சுத்தமாயா சம்மந்த சரீராதிகளைத் தாங்கி போதிக்கு முறையை கைக்கொண்டு அநாதிநித்தியப் பொருள்களாகும், பதிபசுபாச லட்சணம் போத்து, சைவசமயம் என்றும் தழைத்து ஓங்க, மேற்கண்ட நான்கு மார்க்கத்திற்கும், அந்த நால்வரும் தனித்தனி உரிமை வகித்து ஞானகைவல்யம், நித்தியானந்த போகம் இவைகளைத் தாங்கள் அனுபவித்து பிறரையும் அனுபவிக்கச்செய்த சிவபெருமான் பிரதிநிதிகளாவார்கள். அவர்கள் செயல்கள் யாவும் சிவபெருமான் உணர்வுக்குஉணர்வாய் நின்று உணர்த்திய வகையில் உணர்ந்து அனுபவித்த செயல்களேயாகும் என்பதை நாம் தெரிந்துகொள்ளும் வரையில் அவர்களது உண்மை போதம் அறியமுடியுமா ? இது தவமாகையால் சுந்தரமூர்த்தி நாயனார் செயலையும், அவரது வாழ்க்கையைப் பற்றிப்பேசவும் எழுதவும், சுந்தரருடைய தாளையே வணங்கி அவரது அருள்பெற்றால் அல்லது திரிபு உணர்ச்சி (மயக்க உணர்ச்சி)யால் பிதற்றுவதை ஒழிக்க முடியாது. சுந்தரர் யோகமார்க்கத்தை உணர்த்த அதிகாரம் பெற்றவர் அவருக்கு ஏனைய மூன்று மார்க்கமாகும் சரியை—கிரியை—ஞானம் அனுபவித்து கைவல்யப்படுத்திக் கொண்டவரே யாவர் B A. படித்த ஒருவன்தான், **matriculation**க்த உபாத்தியாயர் ஸ்தானம வகிக்கலாம் என்ற உவமை போல் மேற்கண்ட மார்க்கங்களை தாம் உண்ர்ந்திருந்தார் என்பது அவரால் ஓதப்பெற்ற தேவாரங்களில் கூறியுள்ளார்.

"படுப்பானை பாய் அறியுமோ—நீ அறிவாய்" என்றும் "அழுக்கு மெய்கொடு" என்ற தேவாரத்தில் சுட்டியதும் அவரது செயல் முழுவதும் சிவபெருமான் உடனிருந்தே நடத்த நடந்து பேறுபெற்றவராவார் என்பதை தெளிவுபடுத்துகிறது. 63 நாயன்மார்களில் சிலர் சுந்தரருடைய உண்மை செயலை உணராமலே சிவ வைராக்கியம் கொண்டதை சிவபெருமானே வந்து தீர்த்துவைத்தபிறகு சுக்தருடைய உண்மைப் போதம் உணர்ந்து அவரது திருவடி தியானத்தால் பேறுபெற்றார்கள் என்பது இவ்விடம் அறிபத்தகுந்தது. சுந்தரருடைய பெருமை முதலியது பெரிய புராண ஆராய்ச்சி செய்தால்தான் காணலாம்.

கைலையங்கிரிக்கு சுந்தரர் தருவிக்கப்பட்ட சமயம் சேரமான் பெருமான் தனது குதிரையில் அமர்ந்து பஞ்சாக்ஷர வல்லபத்தால் கைலைக்கு ஏகி சிவபெருமான் சுந்நிதியை அடைய சிவபெருமான் சேரமான பெருமானை நோக்கி நாம் உம்மை அழையாதிருக்க நீர் எப்படி கைலைக்கு ஏகலாம் என புன்னகையுடன் கேட்க (பெரியபுராணச் செய்யுள்) "அரசர் அஞ்சலி கூப்பி அடியேன் ஆரூரர் கழல்போற்றி புரசையானைமுன் சேவித்து வந்தனன்" என்றார்சேரமான், சிவபெருமான் சந்நிதிகாண நின்று இவ்வளவு தைரியத்துடன் சுந்தரமூர்த்தியின் திருவடி தியானத்தால் கைலைக்கு வரப்பெற்றேன் என்று சொல்லுவாரானால் சுந்தரர் பெருமையை நப்போலியர் சுளுவில் அறிந்துகொள்ள முடியுமா, சுந்தரர் யோகப்பயிற்சியில் கண்டு தளரா ஞானம் அந்தக்கரண சுத்தம்-தன் சரீரத்தின்கண்ணே பதியிருப்பு, பசு, பதி வயப்பட்டு பேரானந்த விளைவு அநுபவம், தக்க ஐந்தெழுத்தின் ஒரெழுத்துருவாம் தன்மைகண்டு அருள்தரும் பெருவெளிக்கே புக்கழுந்தி பதார்த்தம் பாராது, பரமே பார்த்து வாழ்ந்த வாழ்வு முதலியனவாகும்.

துடிசைகிழார் எழுதியுள்ள வியாசத்தில் அவரது ஒவ்வொரு நிமிஷச் செயலும், பதி ஆஞ்ஞையால் நடத்தப்பட்டனவென்ற ஞானார்த்தம் அல்லது தத்துவார்த்தம் என்று சொல்லும் உண்மையை விவரித்திருக்கிறார். அன்பர்கள் அனைவரும் சுந்தரர் திருவடி தியானத்துடன் அவ்வியாசத்தை அமைதியுடன் படித்து உணர்ந்து இவ்வுண்மை யறியாதவர்களுக்கும் போதித்து மகிழ்ச்சியடையச் செய்வார்கள் என்று நம்புகிறேன் உலகில் ஒரு பழமொழி —'நாலுபேர் சொன்னபடி செய்' அப்பழமொழிக்கு மேற்கண்ட சமய குரவர்கள் நால்வரே அவர்கள் காட்டிய மார்க்கம் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்குபடித்தாயுள்ள சோபானமுறைகள்தான் இந்த சாதனங்களால் பெற்றபயன். சிவபெருமான் ஒருவரே சர்வ போக்தா ஏனைய ஆன்மகோடிகள் அவரது கரணம் சக்தியுடன் கலந்து செய்யும் பஞ்சகிர்த்தியம் காரணமாக ஆன்மா அடைய நின்றுள்ளது. சிவானந்த போகவாழ்வே அதை நம் சுந்தரர் உணர்ந்து அநுபவித்தவர் என்பதை இந்த வியாசத்தில் அறியப்படுத்தியிருக்கிறார்.

சு. செல்லைய்ய முதலியார்,

பனையூர்.

சுத்தாத்துவிதசைவசித்தாந்த பானு

சிவஞானபோத எளியநடை ஆசிரியர்.

உ
சிவமயம்.

# குருபாதம்.

---

உலகத்தில் மக்களால் ஆர்ச்சிக்கத்தக்கவை அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கே. அவைகள் புருஷார்த்தங்களெனச் சிறப்பித்துரைக்கப்பெறும். அவைகளை அடையும் நெறிகளைப் போதிப்பவை சாஸ்திரங்கள்.

சாஸ்திரங்களின் கருத்துக்களை அறியும் நுண்ணுணர்விலார்க்கு அவைகளைச் சரித்திர வாயிலாக விளக்குவன புராணங்கள். புராணங்களைப்படிப்பது வெறுங் கட்டுக்கதை (நாவல்)களைப் படிப்பதைப்போலக் காலக்கழிவிற்காக வன்று, சாஸ்திரங்களின் கருத்தை யறிந்தொழுகவே.

இக்காலத்தில் புராணங்களைப் படிப்பது இழிவாகக் கருதப் படுதற்குக் காரணம் அவைகளில் ஆழ்ந்துகிடக்கும் சாஸ்திர சாரங்களை உணருமாற்றலில்லாமையே. இப்போது வழங்கும் புராணங்களெல்லாம் உண்மையாக நடந்த சரித்திரங்களெனக் கொள்ளவும் கட்டுக்கதைகளெனத் தள்ளவுந்தக்கனவன்று. பல புராணங்கள் உண்மைச் சரித்திரங்களையே கூறுகின்றன. அவற்றுள் தலையாயது நமது பெரியபுராணமே.

பெரிய புராணத்திற்காணப்படும் சரித்திரங்களெல்லாம் உண்மையாக நிகழ்ந்தனவே யாதலால், அதிற் காணப்பெறும் **தம்பிரான் றேழர்** திருச் சரிதமும் உண்மையாகவே நிகழ்ந்ததென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆனால் அதைப் படிப்பவர்கள் அவர் சரித்திரத்தைக் கதாரூபமாக அனுபவிக்கிறார்களேயன்றி அதனால் பெறத்தக்க சாஸ்திர நுண்பொருள்களை அறிந்தனுபவிப்பதில்லை. அக்குறையை நீக்கவே இந்நூலெழுதப் பெற்றிருக்கிறது. ஜீவ சுபாவத்தால் அபிப்பிராய பேதங்களுக்கிடமிருக்கலாம். நூலெழுந்த நோக்கமே கவனத்திற்குரியது.

பொதுவாகத் தமிழ்மக்களுக்கும், சிறப்பாகச் சைவ நன்மக்களுக்கும் உதவியான பல நூல்களை இவ்வாசிரியர் சைவத்திருவாளர் துடிசைகிழாரவர்கள் வெளியிட்டிருப்பது உலகறிந்ததே. இன்னும் பல நூல்களை வெளியிட்டுப் பேருதவி புரியுமாறு அனுக்கிரகிக்கத் திருவருளைப் பிரார்த்திக்கிறோம்.

"நேருமூழ்வழி தொழில்பிறிதடையினு நெஞ்சமே யுயிர்க்கெல்லாம்—பேரிதஞ்செய் வித்திடு முடைகெழுமலம் பிணக்கிதஞ் செய்யேலே"

**சச்சிதாநந்தம்.**

# தம்பிரான் தோழர் தவவாழ்க்கை.

சமயாசாரிகள் நால்வரும் உலகத்தில் நான்கு மார்க்கங்களை நடித்துக்காட்ட எம்பிரான் திருவருளால் அவதரித்தவர்கள் ஆவார்கள்.

அவர்களெல்லாம் மற்ற மானிடர்களைப்போல பிறந்து சுகதுக்கங்களை அனுபவித்து, இறந்துபட்டு உழல வந்தவர்களல்ல.

> " உடம்பினைப்பெற்ற பயனாவதெல்லாம்
> திடம்பட ஈசனைத் தேடுதலாகும்."
> என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
> தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே "

என்ற மந்திரங்களை உலகத்தார்க்கு ஊட்டவே வந்தவர்கள்.

அவர்கள் அவதரித்த பின், ஈசனை நாடித் தலங்கள்தோறும் சென்று, நன்றாகத் தேவாரப்பாக்களால் இறைவனைப் பாடி, வழிபட்டு, முத்தியடைந்ததை யாவருமே அறிவர்.

இறைவனை ஆன்மாக்கள் வழிபடுதல் முக்தியின்பொருட்டு அம்முக்தியை அடைதற்கு நான்கே வழிகள் உள—அவை

(1) தாசமார்க்கம்.
(2) சற்புத்திர மார்க்கம்.
(3) சகமார்க்கம்.
(4) சன்மார்க்கம்.

1 தாசமார்க்கத்தை விளக்க அப்பர் சுவாமிகளும்,
2 சற்புத்திர மார்க்கத்தை விளக்க சம்பந்த சுவாமிகளும்,
3 சகமார்க்கத்தை விளக்க சுந்தரமூர்த்திகளும்,
4 சன்மார்க்கத்தை விளக்க மாணிக்கவாசகரும்,

அவதரித்து விளக்கிக்காட்டியுள்ளார்கள்.

இன்று நாம் எடுத்துக்கொண்டது சகமார்க்கத்தை விளக்கிய சுந்தரமூர்த்திகளுடைய தவவாழ்க்கையைப்பற்றி நான் உங்களுக்கு அவருடைய சரித்திரத்தைக் கூற வரவில்லை. அவர் சரித்திரம் உங்களுக்கு நன்றாகத்தெரியும்.

ஆகையால், அவருடைய சரித்திர பாகங்களை எடுத்து, அப்பாகங்களெல்லாம் சைவ சித்தாந்தக் கருத்துக்களை எடுத்துக்காட்ட அவரால் நடித்துக்காட்டிய திருவிளையாடல்கள் என்று மாத்திரம் கூறி அவருடைய தவவாழ்க்கையை விளக்குவாம்.

தம்பிரான் தோழர் சகமார்க்க நாடகத்தை நடித்துக்காட்டினரே ஒழிய, நடிக்கும்போதெல்லாம் அவருடைய மனம் தம்பிரானிடமே இலயித்து இருந்தது என்பதை அறிந்தவர் அறிவார் அறியாதவர் அறியார். அறியாதவர் எல்லாம் அவரை இரண்டு பெண்சாதி கட்டிக்கொண்டவர், இரண்டாவது கலியாணத்தைப் பொய்ச் சத்தியம்செய்து முடித்துக்கொண்டவர், பொய்ச்சத்தியம் செய்ததால் அதற்குத் தண்டனையாகக் கண்ணை இழந்தவர். தாம் வைத்திருந்த தாசி வீட்டிற்குப் பரமசிவனைத் தூதாக விடுத்தவர் என்று பலவாறாக இழித்துரைத்துப் பழிக்குப் பாத்திரமாவார்கள்.

ஆகையால், அவருடைய வாழ்க்கை மேற்சொல்லியபடி உலகவாழ்க்கையா அல்லது தவவாழ்க்கையா என்று ஆராய்வாம்.

## ஞான இச்சை.

சுந்தரராக அவதரித்தவர் ஆலாலசுந்தரர். அவர் ஒருசிறந்த யோகீசுவரர். பூர்வ ஜென்மத்தில் அவருக்கு ஞானம் கைகூடவில்லை. அவருடைய பக்குவத்தை அறிந்து கடவுள் அவருக்கு ஞானத்தை அருளும்பொருட்டும் உலகத்தார் யோகமார்க்கத்தை உணர்ந்து ஞானமார்க்கத்தைக் கைக்கொள்ளும் பொருட்டும், ஆலால சுந்தரருக்கு ஞானத்தின்பேரில் இச்சைக்கொள்ளும்படி செய்தார்.

சரியை கைவந்தவர்களுக்கு கிரியையிலும், கிரியை கைவந்தவர்களுக்கு யோகத்திலும், யோகம் கைவந்தவர்களுக்கு ஞானத்திலும் இச்சை செல்வது இயற்கை.

அதுபோலவே நமது ஆலாலசுந்தரரும் யோகம் கைவந்தவ ரானபடியால் அவருக்கு ஞானத்தின்பேரில் இச்சை உண் டாயிற்று.

சரியை, கிரியை, யோகம், ஞானம் இவைகளில் தேர்ச்சி பெறவேண்டுமானுல் எல்லா ஆன்மாக்களும் பூமியில் பிறந்து தான் ஆகவேண்டும். அந்தப் பெரும்பாக்கியம் இந்தப் பூமி அண்டம் ஒன்றுக்குத்தான் உண்டு. மற்ற அண்டங்களுக்குக் கிடையாது. இதனுலன்றே நம் மணிவாசகனுர் "புவனியிற்போய் பிறவாமையில் நாள் நாம போக்குகின்றேம் அவமே இந்தப் பூமி சிவனுய்யக்கொள்கின்றவாறென்று நோக்கி திருப்பெருந் துறையுறைவாய் திருமாலாம் அவன் விருப்பெய்தவும் மல ரவன் ஆசைப்படவு நின்னலர்ந்த மெய்க்கருணையு நீயும் அவனி யிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய் ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே" என்று விளக்கினுர்.

ஆகையால், இந்தப்பூமி அண்டம், அதிலும் பரத கண்டம் அதிலும் தென் தமிழ்நாடுதான் தேர்ச்சி பெறுதற்கு ஏற்ற இடமென்று கூறலாம்.

யோகம் கைவந்து ஞானத்தில் இச்சைகொண்டவர்க்கே கடவுள் குருவாய் வந்து, கூடவே சுற்றித்திரிந்து, முத்தியை நல்குவர் என்பது:—

சீராரு ஞானத்திச்சை செலச்செல்ல
வாராத காதற்குருபரன் பாலாக
சாராத சாதக நான்குந்தன் பாலுற்றேர்
ஆராயு ஞானத் தனுமடிவைக்கவே.

என்னும் மந்திரத்தால் விளங்கும். ஆகையால் உலகத்தார் க்கு தமக்கு நன்ருய்த்தெரிந்த யோகமார்க்கத்தைப் போதிக்கவும் தாம் ஞானமார்க்கத்தை அடையவும், ஆலாசுந்தரர் இப்பூமி அண்டத்தில் தென் தமிழ்நாட்டில் திருநாவலூரில் அவதரித்தார்.

ஞானம் இருவகைப்படும்:—பரஞானம் அபரஞானம் இவை களையே அநிந்திதை கமலினியாக உருவப்படுத்தியுள்ளார்கள். ஞானத்தைப் பெண்ணுக உருவகப்படுத்தியதன் கருத்து என்ன வென்ருல் பெண்ணுனவள் தனது வீட்டில் இறையளவாயினும் விட்டு நீங்காது இருந்து சிற்றின்பத்தை தருதல்போல் ஞான மானது மனமாகிய வீட்டின்கண் இறையளவாயினும் நீங்காது இருந்து பேரின்பத்தைத் தருதலால் அவ்வாருக உருவகப் படுத்தப்பட்டது.

மேலும் உலகத்திலுள்ள பௌதிக சக்திகளுக்கு (Scientific powers) அதாவது மின்சார சக்தி காந்த சக்தி முதலிய வைகளுக்குத் தமிழில் சத்தி என்றே பெயர் சக்தி என்றால் (power) வல்லமை — பெண் அல்ல. ஆங்கிலத்தில் Positive Negative என்று கூறுவதை தமிழில் ஆண் சக்தி பெண் சக்தி என்பது வழக்கம். ஆண் சக்தியை வெண்மையாகவும், பெண் சக்தியை சிகப்பு, பச்சை, ஊதா நீலம் முதலிய வர்ணங்களாகவும் குறிப்பது வழக்கம்

Positive Negative சேராவிட்டால் ஆட்டம் இல்லை. அதுபோலவே தமிழில் சிவம் சக்தி சேராவிட்டால் ஆட்டம் இல்லையென்பர்.

ஆலாலசுந்தரர் திருநாவலூரில் வேதியர் குலத்தில் தோன் றினது எதைக்குறிக்கிறது என்றால் நாவலூர் — நா என்ற அக்கரத்தைக்கொண்ட சுவாதிட்டான நகரம்என்றும் சிருட்டிகர்த் தா பிரமா (வேதியர்) என்பதையும் குறிக்கும்.

கமலினியாரை உருத்திர கணிகையர் குலத்தில் உதிக்கச் செய்ததானது அபர ஞானமானது, கலைகளை ஓதி யாவராலும் எளிதில் அடையக்கூடும் என்பதைக்குறிக்கின்றது.

அநிந்திதையாரை ஞாயிறு என்றும் ஊரிலே, ஞாயிறு கிழவருக்குப் புத்திரியாகச் செய்ததானது.

பரஞானமானது ஞானகாசத்தில் ஞானதித்தனாகிய முதல் வனையே பிதாவாக உடையது என்பதுவும், அதைப் பக்குவர் களே அடையமுடியும் என்பதையும் குறிக்கும்.

ஆலாலசுந்தரர் அவதரித்தபின் நரசிங்கமுனையர் அவரை எடுத்து வளர்த்ததானது திதிகர்த்தா நரசிங்கம் or திருமால் என்பதையும் குறிக்கும்.

# —: தாசமார்க்கம். :—

சுந்தரர் அவதரித்து, நரசிங்கமுனையர் இல்லத்தில் வளர்ந்து பருவம் அடைந்த காலத்தில், **சடங்கவியின்** புத்திரியை விவாகம் செய்யச் சொந்தத்தகப்பனும் வளர்ப்புத் தந்தையும் தீர்மானிக்க, கடவுள் அதைத் தடுத்துவிட்டார்.

கடவுளின் நவபேதங்களில் பிரமன் விஷ்ணு இவர்கள் சடத்தை ஆக்கியளிக்கும் தொழிலைப் புரிபவர்கள். ஆகையால் இவர்கள் தீர்மானித்த கன்னிகையை விவாகம் செய்யாததற்குக் காரணம் நமது நாயனருக்கு ஆகாமியம் ஏருமற் பொருட்டே சடங்கவியின் புத்திரியை ஆகாமியமாக உருவகப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த ஜென்மத்தில் ஒவ்வொருவரும் பிராரத்துவத்துக்கு ஈடாகச்செய்யும் வினை ஒருவிதம். தாமேமனப்பூர்வமாகப் புதிதாகச்செய்யும் வினை மற்றொருவிதம். இப்படிச் செய்யும் ஆகாமியந்தான் சஞ்சிதக்குவியலில் சேர்ந்து அதைப் பலப்படுத்திப் பிறவியை வளரச் செய்யும் ஆகையால், சடம் எடுத்தபின் செய்யும் வினையாகிய ஆகாமியம் சடங்கவியின் புத்திரியாக உருவகப்படுததப்பட்டிருக்கிறது.

யோகம் கைவந்தவர்களுக்கு, கடவுளே குருவாக வந்து, கூடவே தொடர்ந்து, வினை ஏரு வண்ணம் பார்த்துக்கொள்ளுவார் என்று முதலிலேயே கூறியிருக்கின்றேன்.

ஆகையால் சடங்கவியின் மணத்தைத் தடுத்தது நியாயம் என்று ஏற்படவில்லையா ?

இதனை அறிந்தல்லவா நம் தெய்வச் சேக்கிழார் ;—

துன்புறுவாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்துவந்து
நன்புல மறையோர் முன்னர் நாம் தடுத்து ஆண்டோம் என்றார்.

என்று அழகாகக்கூறினர்.

முதலில் கடவுள் தடுத்து ஆண்டதால் சுந்தரமூர்த்திகளை அடிமையாகக் கொண்டார். இது எதைக் குறிக்கிறதென்றால், யோகியும், ஞானியும்கூட சரியை, கிரியைகளை விடக்கூடாதென்பதைக் காட்டுகிறது.

அன்று முதல் சுந்தரருடைய தேவார பாக்கள் ஆண்டான் அடிமைத் திறத்தைக் குறித்தே பாடப்பட்டிருக்கின்றன.

கடவுள் நாயனுரைத் தடுத்து ஆண்டகாலத்தில் சுந்தரருடைய பாட்டனர் எழுதிக்கொடுத்ததாக ஒரு பொய்யான அடிமைச் சீட்டைக் காட்டினர் என்று சித்தாந்த உணர்ச்சியில்லாதவர் கூறுவார்கள்.

கடவுள் ஒவ்வொரு ஆன்மாவும் உய்யும்பொருட்டு தனு-கரண புவன--போகங்களைக் கொடுத்திருக்கிறர். அவைகள் கடனுகக் கொடுக்கப்பட்டவைகளே யொழிய ஆன்மாவுக்குச் சொந்தமல்ல. ஆகையால், நாம் ஒவ்வொருவரும் (உடல் எடுத்த அனைவரும்) அக்கடனுக்கு அடிமைச்சீட்டு எழுதிக்கொடுத்திருக்கிறேம். அந்தச் சீட்டைக் கடவுள் வேண்டும்காலத்து காட்டுவார்.

**திருமூலர்.**

என்றுயோ டென்னப்பன் ஏழேழ் பிறவியும்
அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்
ஒன்றுய் உலகம் படைத்தான் எழுதினன்
நின்றுன் முகில் வண்ணன் நேர் எழுத்தாயே.

அந்தச் சீட்டை பிரமா எழுதினர் மால் சாக்ஷி போட்டிருக்கிறர்.

ஆகையால் சுந்தரர் மாத்திரம் அடிமை என்பது அல்ல நாம் எல்லோரும் அடிமைகளே.

நாமும் யோக சித்திபெற்றுல் நம்மையும் அவ்வாறு தடுத்தாட்கொள்வார்.

## தவநெறி.

சுந்தரர்தான் அடிமை என்பதைத் தெரிந்துகொண்டபின், தத்துவப்படிகடந்து முத்தியை அடைய தவநெறி யருளவேண்டுமென்று "மலையார் அருவி" என்ற பாசுரத்தால் வேண்டிக்கொண்டார்.

வேண்டுவார் வேண்டுவதே ஈவானுகிய பரம்பொருள் அப்படியே அருள்செய்தார். இந்தமாதிரி தாசமார்க்கத்தில் கொஞ்சகாலம் தலங்கள் சேவித்து வழிபாடியற்றிவந்தார். அப்படியிருக்கையில் ஒருநாள் நம் சுந்தரமூர்த்திகள் ஓர் மடத்தில் நித்திரை செய்யும்போது, கடவுள் கிழவர்போலவந்து திருவடி தீக்கைசெய்து நாயனுரை புத்திரராகப் பாவித்தார்.

# சற்புத்திர மார்க்கம்.

அன்றுமுதல் நமது நாயனுர் கடவுளைப் பிதாவாகப் பாராட்டிப் பாட ஆரம்பித்தார் தீக்கைசெய்த குரு பிதாவுக்குச் சமம் என்பதை யாவரும் அறிந்ததே. இதனை "**எந்தையுமிருப்பது ஆநர்**" என்ற பாடலால் அறியலாம்.
இப்படி சற்புத்திர மார்க்கத்தில் கொஞ்சகாலம் இருந்த பின், ஓர் தலத்தின்கண் எழுந்தருளியிருக்கும்போது,

"**தோழமையாக உனக்கு நம்மைத்தந்தனம்**" என்று ஓர் அசரீரி உண்டாயிற்று.

## —: சகமார்க்கம். :—

அன்றுமுதல் சுந்தரர் கடவுளை நண்பராகப் பாவித்துப் பாட ஆரம்பித்தார். இப்பாகுபாடுகள் எல்லாம் அவரது பாடல்களை உற்று நோக்குவார்க்கு விளங்காமலிராது.

இவைகள் எல்லாம்
சன்மார்க்கத்தில் தாசமார்க்கம்
,, சற்புத்திர மார்க்கம்.
,, சகமார்க்கம் ஆகும்.

இம்மூன்று மார்க்கங்களும் யோக மார்க்கத்தில் அடங்கியவை. "யோகிக்கு யோகாதி மூன்றுள" என்னும் மந்திரத்தால் அறியலாம்.

இவ்வளவு பக்குவத்தை அடைந்தால்தான் ஒருவன் அபர ஞானத்தைப்பெற்று யோக சாதனையில் சித்தியடையலாம்.

## சுந்தரர் அபரஞானம் பெற்றது.

பிறகு சுந்தரர் திருவாரூரில் பரவையாரை மணந்து ஆண்டு வதிந்து வந்ததானது அவர் அபரஞானத்தை அடைந்து யோக சாதனையில் சித்தியடைந்ததை விளக்கும். இது சிலர் நினைப்பது போல, உலக இன்பத்தை நாடி மணம்புரிய இல்லை. இதனை நம் சேக்கிழார் "தென்னுவலூர் மன்னன் தேவர் பிரான் திருவருளால்

மின்னாருங் கொடிமருங்குல் பரவை எனும் மெல்லியறன்
பொன்னாரு முலை ஓங்கல் புணர்குவடேசார்பாகப்
பன்னாளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினர்."
என்று தெளிவுபடக் கூறியுள்ளார்.

"பொன்னாரு முலை ஓங்கல் புணர்குவடு" என்ற வார்த்தைகள் இருப்பதினாலேயே உலக இன்பத்தை அனுபவித்தார் என்று கூறலாகாது. சுந்தரரும் பரவையாரும் சகமார்க்க நாடக நடிகர்கள் என்பதை ஒவ்வொருவரும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

அபரஞானம்=பரவையார் என்று தெரிந்துகொண்டால் புருடன் பெண்சாதி என்ற ஞாபகம் ஓடிவிடும்.

ஞானத்தைப் பெண்ணாக உருவகப்படுத்தும்போது, பெண்ணுக்குரிய சிற்றின்பத்தைத்தரும் உறுப்புக்களை ஞானத்திற்கு பேரின்பத்தைத்தரும் தானங்களாகஅமைப்பது கவிகளின் திறம்.

சிற்றின்பத்திற்கு மூலமாயுள்ளது இரண்டு:— i கருவிடும் வாசல் ii கொங்கை.

பேரின்பத்தை விளக்கும் யோக சாதனைக்கு மூலமாயுள்ளது (i) மூலாதாரம் (ii) சிகரம்.

எருவிடும் வாசலிருவிரல் மேலே
கருவிடும் வாசலிருவிரல் கீழே
உருவிடு சோதியை உள்கவல்லார்க்கு
கருவிடும் சோதிகலந்து நின்றானே.
இதுதான் ஓமத்தானம்.

இதுபோலவே ஞானத்திற்குக் கொங்கைகளை அமைப்பதுவும் சிற்றின்பத்தில் இச்சைகொண்டவர்களுடைய மனத்தைக் கவர்தல் மார்பு அல்லது இருதயத்தின் சுபாவம்.

அதுபோல், யோக சாதனைசெய்பவர்களின் மனத்தைக் கவர்தல் மார்பு அல்லது இருதயத்தின் சுபாவம்.

இதைத்தான் பூசைத்தானம் என்பர். இதற்கு அக்கரம் சி or சிகரம் அதிபதி உருத்திரன்.

இருதயமானது இரத்தத்தின் அசுசியைப் போக்கி தேகத்தைக் காப்பதுபோல, உருத்திரர் ஆன்மாக்களின் மலபந்தத்தை நாசம்செய்து ஞானப்பாலூட்டி வைப்பார்.

சிற்றின்ப போகிகள் கொங்கைகளைக் கைப்பற்றுவதுபோல் யோகிகள் ஞானப்பாற்சுரக்கும் அமுதத்தானமாகிய இருதயத்தில் பற்றை வைப்பார்.

இதுதான் ஞானத்தில் கொங்கைகளை அமைத்ததின் கருத்து இதைத்தான் அழியாத்தலம் என்றும் கூறுப.

அஞ்சுநடுவே அழியாத்தலங்காட்டி
நெஞ்சு நடுவே நிறுத்தினன் என்னந்தி.

"நமசிவாய என்ற அஞ்செழுத்தின் நடுவே உள்ள சி என்ற எழுத்தாற் குறிக்கப்பட்ட இடமாகிய மார்பாகிய அழியாத் தலத்தை" க்காட்டி என்று பொருள் கொள்க.

சி என்ற எழுத்தைத்தான் கொங்கையாக உருவகப் படுத்தியது.

சி—சிகரம்—மலை—ஓங்கல்—குவடு அதனால் கொங்கையைச் சிகரம் என்றே கூறுவர்.

பரியங்கி யோகத்துப் பஞ்சகடிகை
அரியவிவ் யோகம் அடைந்தவர்க்கல்லது
சரிவளை முன்கைச்சி சந்தனக்கொங்கை
உருகத்தழுவ ஒருவர்க்கொண்ணதே.

திருமூலர்.

ஆகையால் நம் நாயனர் பரவை எனும் மெல்லியல் தன் பொன்னரும் முலை ஓங்கல் புணர்குவடே சார்வாகப் பன்னளும் பயில்யோகப் பரம்பரையின் விரும்பினரா அல்லது உண்மை யாகவே உலக இன்பத்தை அனுபவித்தாரா என்று எண்ணிப் பாருங்கள்.

சேக்கிழார் பெருமான் என்ன அழகாக "பன்னளும் பயில் யோகம்" என்று குறிப்பிடுகிறர்.

இந்த மாதிரி நம் நாயனர் அபர ஞானத்தோடு கூடி யோக சாதனையில் இருந்தபோதுதான், மலபரிபாகம் ஏற்பட்டது.

## மலபரிபாகம்.

இது குண்டையூர்க் கிழார் கொடுத்த நெல்லை அட்டித்தரப் பாடிய பாட்டால் அறியலாம்.

நெல்லை எடுத்துக்கொண்டுவந்து பரவையார் வீட்டில் சேர்த்துவதற்கு ஆள் தரவேண்டுமென்று வேண்டியதின் கருத்து அபர ஞானமாகிய பரவையார் வீட்டில் நெல் வந்துசேர்ந்தபின்பு அதன்கண் உள்ள முளை தவிடு உமி நீங்கும். அதாவது அபர ஞானத்தை ஓதி உணரவே ஆன்மாவின் மும்மலங்களும் நீங்கும் என்பதே.

இந்தத் திருவிளையாட்டு நம் நாயனாருக்கு மும்மலநாசம் ஏற்பட்டதைக் குறிக்கும்.

ஆணவ மாயையுங்கன் மமுமாமலந்
தாணு முளைக்குத் தவிடுமி ஆன்மாவும்
காணுவை யொவ்வா மற்றண்டுல மாய நிற்கும்
பேணுவாய் மற்றுநின்பாகம் பிரித்தே.

திருமூலர்.

## இருவினை ஒப்பு.

மலபரிபாகம் ஏற்பட்டால் இருவினை ஒப்பும் ஏற்படவேண்டும்.

கோட்புலி நாயனார் தமது புத்திரிகள் இருவரையும் அடிமைகளாகக்கொண்டருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அவர்களைப் புத்திரிகளாகப் பாவித்து வெகுமதி கொடுத்தனுப்பியதானது, முத்திக்கு கோள் அல்லது இடையூருக உள்ள நல்வினை தீவினைகள் தம்மைச் சாராது இருவினை ஒப்பு அடைந்ததை விளக்கும்.

## அனுக்கிரகம்.

இருவினை ஒப்பு, மலபரிபாகம் ஏற்பட்டால், அனுக்கிரகம் அடுத்தாற்போல் உண்டாகவேண்டும். இதுதான் நமது நாயனார் திருப்புகலூரில் நிட்டை கூடியிருந்ததை நித்திரை செய்ததாகவும், அனுக்கிரகம் பெற்றதை செங்கற்கள் பொன்னானதாகவும் உருவகப்படுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

இதன்பின், பொன்னை மணிமுத்தா நதியில் இட்டு, திருவாரூர்க் குளத்தில் எடுத்ததானது மணிபூரகமாகிய உந்தியினின்றும் யோகமார்க்கத்தால் பிராணனை தேகத்தின் மேற்றானமாகிய ஆஞ்ஞைக்கு வரச்செய்து அனுக்கிரகம் பெற்றதைக்குறிக்கும்.

உந்திச்சுழியி னுடனேர் பிராணனை
சிந்தித்தெழுப்பிச் சிவமூலமந்திரத்தால்
முந்திமுகட்டி னிறுத்திய பானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவனாமே.

திருமூலர்.

## சன்மார்க்கம்.

இவ்வளவும் கடந்தபின் சன்மார்க்கம் கைகூடும். இவ்வாறு அபரஞானத்தால் யோகசித்தி பெற்றபின்தான் நமது நாயனார் பரஞானமாகிய சங்கிலியாரை அடைந்தது.

சங்கிலியாரை அடைவதன்முன் கோயிலில் சபதம்செய்யாது மகிழின் கீழ் சபதம் செய்தது எதைக் குறிக்கிறதென்றால், கோயில் எல்லை ஏற்பட்ட கட்டடம், அதில் ஞானம் அடங்காது என்பதையும், காலத்தாலும் இடத்தாலும் நீக்கமற்றதாயுள்ள பேரின்பம் என்னும் பொருளைத்தரும் மகிழின் கீழ் நமது நாயனார் ஞானத்தை அடைந்ததைக் குறிக்கும். சபதம்செய்வது உலக இயற்கை. வைராக்கியத்தின் முடிவு

சங்கிலியார் சுந்தரமூர்த்திக்கு இளையாள் ஆகவேண்டும், பரவையார் மூத்தாள் ஆனதால் சங்கிலியார்—இளையாள்—பரஞானம் என்பன ஒருபொருட்கிளவிகள்.

“ நீல நிறனுடை நேர் இளையாளொடும்
சாலவும் புல்லிச்சதமென் றிருப்பார்கட்கு
ஞாலமறிய நரைதிரைமாறிடும்
பாலனுமாவார் பராநந்தி யாணையே ”

திருமூலர்.

ஆகையால் நமது நாயனார் பரஞானத்தை அடைந்து அநேக காலம் இருந்தார் என்பதுபோதருகின்றது.

“ ஊழியா மொருகணந்தான் அவ்வூழி ஒருகணமாம்
முன்னிய காலங்கள்பல முறையினால் வந்தகல”

சேக்கிழார்

இப்படியிருந்த நாயனாருக்கு, அபரஞானத்தின்மேல் மறுபடியும் இச்சை உண்டாயிற்று. இது திருவருள் அவராக வருவித்துக்கொண்டதல்ல. ஏனென்றால் அபரஞானம் வேண்டேன் என்று சபதம்செய்தவர் அவ்வாறு செய்யார்.

ஆனால் குற்றம் அவருடையதல்லவே பிறகு ஏன் கண் குருடாயிற்று என்றால் கூறுதும்.

பரஞானத்தால் பரத்தை தெரிசித்தார்
பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்.

என்றபடி பரவெளிச்சத்தில் இருந்த ஒருவர் அபரத்திற்கு வந்தால் கண் மங்குவது இயற்கை.

சூரிய வெளிச்சத்திலிருந்து வீட்டிற்குள் வந்ததும் கொஞ்ச நேரம் கண் தெரியாததுபோல யோகமார்க்கமாகிய தெப்பத்தைக் கொண்டு, பவ சாகரத்தை நீந்தி, திருவொற்றியூர் என்னும் கரை சேர்ந்து, சங்கிலியார் என்னும் பரஞானத்தோடு இரண்டறக் கலந்து இருந்த நமது நாயனர் அவர்கட்கு அவ்வூரை விட்டகல இச்சை உண்டாக்கினது திருவருள் என்று மேலே கூறினேன் ஏன் அப்படித் திருவருள் செய்தது என்றால், சுந்தரமூர்த்தி நாயனருக்குத் திருமேனியருளியது அவர் ஞானத்தை அடைந்து மற்றவர்களுக்கு யோக மார்க்கத்தை போதிக்கும் பொருட்டு என்று முன்னமே கூறினும் சுந்தரமூர்த்தி நாயனருக்கு அக் கடமை எஞ்சி நின்றது. மற்றவர்களுக்கு யோக மார்க்கத்தைப் போதிக்க வேண்டுமானல் அபர ஞானத்தை அடைந்துதான் ஆகவேண்டும்.

ஆகையால் சுந்திரமூர்த்திநாயனரைத் தம் கடமையைச் செய்யத் திருவருள் தூண்டிற்று. ஆகவே அவர் திருவாரூர்ப் பரவையாரிடம் வந்துசேர்ந்தார்.

பரஞானத்திலிருந்து அபரஞானத்திற்கு வர இச்சை உண்டான காலத்தில் நிட்டை குலைந்தது. குலைந்தபோதிலும் சிவமணம் தங்கியிருந்தபடியால் அவருக்கு மாயா காரியங்கள் சில காலம் வரையில் தோற்றவில்லை. இதுதான் கண் குருடாயிற்று என்று கூறுவது.

சேரமான் பெருமான் முதலியவர்களுக்கு யோகமார்க்கத்தைப் போதிப்பதானது பாக்கி இருந்தபடியால் நமது மூர்த்திகள் மறுபடியும் அபர ஞானத்தை அடையவேண்டியதாயிற்று.

## தூதுசென்றது.

பரவையாருக்கும் சுந்தரருக்கும் மறுபடியும் நேசத்தை உண்டாக்கிய திருவிளையாட்டு என்னவென்றால், ஞாயிறுதித்தியன்

பேரொளியால் பூதவொளி மழுங்கி, அசத்தைக் காணுதிருந்த கண்களுக்குப் பதார்த்தங்களைப் பதார்த்தங்களாகக் காணச் செய்ததே.

அது கடவுளே நேர்நின்று செய்தாலல்லாமல், பரஞானம் பெற்றவர் அபரஞானத்தை அடைய இஷ்டப்படார். இதைத்தான் சிவபெருமான் தூதுசென்றதாகக் கூறுவர்.

இதை அறிந்தபின்னருங்கூட ஒருவர் உலக அறிவுகொண்டு ஆராயப்புகின் குற்றம் அவருடையதே.

சுந்தரர் திருவொற்றியூரினின்றும் திருவாரூர் வந்து பரவை இல்லம் அடைந்தபின், சேரமான்பெருமான் நண்பரானர்.

அவர் நமது சுவாமிகளுக்கு பழமையான நகரில் இருந்த முன் புகுந்த பண்டாரம் முதலியவைகளை ஆட்கள்மீது அனுப்ப அவைகளைக் கடவுள் பூத கணங்களால் அபகரிக்கச்செய்தார்.

"தொன்னகரில் இற்றைக்கு முன் புகுந்த நற்பெரும் பண்டாரம்" என்றது.

சேரமான் பெருமானைச் சார்ந்திருந்த பழவினையை இதைக் கவர முதல்வன் ஞானிசளாகிய முடிச்சவிழ்ப்பவர்களை வைத்திருக்கிறர்.

> "தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிசள்
> முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்."

திருமூலர்.

பிறகு கயிலைக்குப் போகுமுன் அவிநாசியில் மகரம் அல்லது சுருவால் விழுங்கப்பட்ட ஒரு குழந்தையை உயிர்ப்பித்து அதற்கு உடையாரிடம் ஒப்புவித்த திருவிளையாட்டானது மகரமாகிய மலத்தாற் கட்டுண்ட ஆன்மாவை அவியாகிய சுவாசத்தால் நாசி வழியாக மூலாதாரத்தினின்றும் எழுப்பி, ஆஞ்ஞைத்தானத்தில் அதற்குத் தாய்தந்தைகளாகிய சத்தி சிவத்தினிடத்தில் ஒப்புவித்தலாம்.

நமது நாயனருக்கு மானுடச் சட்டை கொடுத்த கருத்து முடியவே மறுபடியும் கயிலை அடைந்தார்.

இவர் வெள்ளை யானையின்மீது ஆரோகணித்துச்சென்றது, பிரணவத்தை ஆதாரமாகக்கொண்டு முத்தி யடைந்ததையும், சேரமான் பெருமான் வாசியின்மீது இவர்ந்து சென்றது, யோக மார்க்கத்தால் அஞ்செழுத்தின் பயனால் முத்தியடைந்ததையும் குறிக்கும்.

"இன்புறு வாசி என்னு மீரெழுத்து
அன்புறு மகிமை அதிசயம் என்றான்."

என்பதால் அறியலாம்.

சுந்தரரும், சேரமான் பெருமானும் கூட்டோடு கைலாயம் சென்றதுதான் சித்தாந்த முத்தி. பூமியில் உடல் விழுந்தால் பிறப்புண்டு. என்பதை உலகத்தாருக்குத் தெரிவிப்பது.

'உடம்பாரழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானர் சேரவும் மாட்டார்"

திருமந்திரம்.

ஆகையால் அன்பர்களே நாயனாருடைய சரித்திரமானது சித்தாந்தக் கருத்துக்களை உண்மை நாடகமூலியமாய் நடத்திக் காட்டியதாகும்.

நமது நாயனார் மேற்பார்வையாகப் பார்ப்பவருக்கு உலகத்தார் போலவும், நுணுக்கமாய் நோக்குவோருக்கு யோகம் கைவந்த ஞானிபோலவும் நடித்துக்காட்டிய அவருடைய தவ வாழ்க்கையானது உலகத்தாருக்கு ஒரு கலங்கரை விளக்கமெனத் திகழ்கின்றது.

இதுகாறுங் கூறியவற்றால் நமது தம்பிரான் தோழர் வாழ்க்கை தவவாழ்க்கையே ஒழிய உலக வாழ்க்கை அல்ல என்பதை நிலைநாட்டினோம்.

## காலம்.

இனி அத்தகைய பெரியார் வாழ்ந்த காலம் எது என்று பார்க்கலாம். அவர் வாழ்ந்த இடம் இத்திருவாரூரும் திருவொற்றியூரும் என்பது உங்களுக்குத்தெரியும்.

காலத்தைப்பற்றி விசாரிப்பதில் பயனென்ன! நமக்கு தத்துவக்கருத்துக்கள் தெரிந்தால் போதாதா என்று சிலர் நினைக்கிறார்கள். அது கூடாது உண்மையாகவே உலகத்தில் வாழ்ந்த ஒரு புருடருடைய சரித்திரமாயிருந்தால் அது பொன்மலர் நாற்றமுடைத்து. காலம் தெரியாவிட்டால் ஒரு புதிதாகப் புனைந்த (Noved)

கதையாக முடியும். ஆகையால் நமது நாயனருடைய காலத்தைத் தெரிந்துகொள்ளுவது மிகவும் அவசியம்.

இவருடைய காலம் 8ம் நூற்றுண்டு என்று சிலரும், 9ம் நூற்றுண்டு என்று சிலரும் கூறுகின்றூர்கள்.

8ம் நூற்றுண்டு என்று கூறுகிறவர்களுக்கு ஆதாரம் இவரை வளர்த்த நரசிங்கமுனையர் கி. பி. 690 முதல் கி. பி. 710 வரை அரசாண்ட பல்லவ அரசராகிய ராஜசிம்மன் அல்லது இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தில் திருமுனைப்பாடி நாட்டில் சிற்றரசராய் இருந்தவர்.

“ பல்லவர்க்குத்திறைகொடாமன்னவரை மறுக்கம் செய்யும்” என்று நமது சுந்தரர் பாடினது இவ்வரையனைக்குறித்தே. ஆகையால் கி. பி. 694 முதல் கி. பி. 712 வரை நமது நாயனர் காலம் என்று கணக்கிடுவோரும் உளர்.

9-ம் நூற்றுண்டு என்று கூறுவார் கொல்லம் ஆண்டு தொடங்கி 1109 வருடங்களாகின்றன. சேரமான்பெருமான் கைலைச்குச்சென்ற வருடத்திலிருந்து கொல்லம் ஆண்டு துவக்கி இருக்கிறது. ஆகையால் சுந்தரரும், சேரமான் பெருமானும் கி. பி. 825ல் கைலை சென்றிருக்கவேண்டும். ஆகையால் சுந்தரர்காலம் கி. பி. 807 முதல் 825 வரை என்கிறூர்கள். இதற்கு அவர் சொல்லைத்தவிர வேறு ஆதாரங்காணேம்.

சுந்தரர் காலம் கி. பி. 825 ஆயிருந்தால் கி. பி. 710ல் இருந்த நரசிங்கமுனையராயர் கி. பி. 825 வரை இருக்க நியாயம் இல்லை. ஆகையால் கி. பி. 694 முதல் 712 வரை என்பதே பொருத்தமாக இருக்கின்றது.

திருவஞ்சைக் களத்திலாவது திருவாரூரிலாவது கல் வெட்டுக்கள் அகப்பட்டு காலத்தை நிச்சயமாகப் புலப்படுத்தும்வரை, மேலே காட்டியகாலத்தையே கொள்ளுவோமாக.

**துடிசைகிழார் அ. சிதம்பரனர்.**

## சிங்கடியப்பனும் செங்கண்வேடனும்.

—— : 0 : ——

சிங்கடியப்பன் என்பது தம்பிரான் தோழருக்கு ஏற்பட்ட பதினறு நாமங்களில் ஒன்று.

தம்பிரான் தோழரின் இயற்பெயர் "ஆரூரன்" என்பது அது அவருடைய பாட்டனுடைய பெயர்.

மற்றைய பதினறு நாமங்களும் ஒவ்வொரு காரணத்தால் ஏற்பட்டவை அவையாவன :—

| | | | |
|---|---|---|---|
| (1) | திருநாவலூரன் | (2) | சிங்கடியப்பன் |
| (3) | தம்பிரான் தோழன் | (4) | சடையன் சிறுவன் |
| (5) | வழுத்தும்வன்றொண்டன் | (6) | வனப்பகையப்பன் |
| (7) | இசைஞானி காதலன் | (8) | இன்றமிழ்ச்சுந்தரன் |
| (9) | ஆலாலசுந்தரன் | (10) | ஆளுடைநம்பி |
| (11) | நாவலர்வேந்தன் | (12) | நம்பி ஆரூரன் |
| (13) | பத்தனூரன் | (14) | பரவை கேள்வன் |
| (15) | திங்கள் வதனச் சங்கிலி கணவர் | | |
| (16) | பந்தம் தவிர்க்கும் சுந்தரமூர்த்தி என்பன. | | |

ஆகையால், சிங்கடியப்பனென்பது சுந்தரமூர்த்திக்கு ஏற்பட்ட ஓர் காரணப் பெயர் அக்காரணம் வருமாறு :—

சுந்தரமூர்த்திகள் திருநாட்டியத்தான்குடியை நண்ணின போது, அவ்வூரில் அடியார்களைப் பூசித்துவரும் சைவசீலராகிய சேனதிபதி கோட்புலிநாயனர் என்பவர் எதிர்கொண்டுவந்து அழைத்துக்கொண்டுபோய் குலவு பாதம் விளக்கி, அருச்சனைகள் புரிந்து, திருவமுது செய்வித்து தமது இருகண்மணிகளாகிய சிங்கடியார்—வனப்பகையார் என்ற புத்திரிகளை அடிமையாகக் கொண்டருளவேண்டுமென்று பிரார்த்திக்க, நம்பி ஆரூரர் அப் பெண்கள் இருவரையும் தமது புத்திரிகளாகப் பாவித்து தொடை மேலிருத்தி, உச்சிமோந்து, பிறகு ஆலயத்தையடைந்து பதிகம் பாடினர். அன்று முதல் நமது ஆரூரருக்கு சிங்கடியப்பன் வனப் பகையப்பன் என்னும் காரணப் பெயர்கள் ஏற்பட்டன.

இப்பெயரை நம் ஆரூரர் அடிக்கடி தாம் பாடும் தேவாரங் களில் கடைக்காப்புச் செய்யுளில் வைத்துப்பாடுவதை நோக்கினல் அவருக்கு இப்பெயரைச்சொல்லி அழைப்பதால் உண்டாகும் ஆனந்தத்திற்கு அளவில்லையாகும். உதாரணமாக ;—

உளங்குளிர் தமிழ் ஊரன் வன்றெண்டன் சடையன் காதலன் வனப்பகையப்பன்.

நலங்கிளர் வயல் நாவலர் வேந்தன்
நங்கை சிங்கடி தந்தை பயந்த
(திருவாழ்க்கொளிபுத்தூர்—12)

ஆகையால் நாமும் அவரை இவ்விரிவுரை முடியும்காறும் சிங்கடியப்பன் என்றே கூறுவாம்.

இனிச் "செங்கண் வேடனும்" என்னும் மகுடத்தைப்பற்றி விவகரிப்பாம்.

## செங்கண்வேடன்.

'செங்கண்வேடன்' என்றால் சிவந்த கண்களையுடைய வேடன் என்று பொருள்படும்.

சிங்கடியப்பனுக்கும் செங்கண் வேடனுக்கும் என்ன சம்மந்தம்? ஏன் செங்கண்வேடனை இவண் கூறவேண்டும்? என்றால் அதற்குச் சிறந்ததோர் காரணம் உண்டு. அதனைத்தான் இன்றைக்கு நாம் ஆராயப்புக்கது.

ஈண்டு "செங்கண்வேடன்" என்றது சிவபெருமானையே.

சிவபெருமான் இதுவரை வேட உருவத்துடன் காட்சி கொடுத்து அருளினது இருமுறையாகும்.

ஒன்று அர்ச்சுனற்கு, இன்னொன்று நம்சுந்தரருக்கு இதனைத் தான்,

" திருவினையகனாகிய மாலுக் கருள்கள்
செய்திடும் தேவர் பிரானை
உருவினனை யொன்று வறியொண்ணு
மூர்த்தியை விசயற்கருள் செய்வான்
செருவிலேந்தியோர் கேழற்பின் சென்றும்
செங்கண்வேடனாய் என்னெடும் வந்தும்
மருவினன் றனை வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்தென்னினைக்கேனே."

என்று நம் சுவாமிகளே விளக்கிக்காட்டிப் பாடியிருக்கின்றார்கள்.

பரவை கேள்வனுக்கு திருநாட்டியத்தான்குடியில் பறையன் பறைச்சியுமாகக் காட்சி கொடுத்தார்.

திருப்பேரூரில் பள்ளனும் பள்ளச்சியுமாகக் காட்சிகொடுத்தார். திருத்துடிசையம்பதியில் வேடனும் வேடச்சியுமாகக் காட்சி கொடுத்தார்.

இக் காட்சிகளை அவ்வத்தலபுராணங்களில் பரக்கக் காணலாம். பெரிய புராணத்தில் காண்டல் அரிது.

துடிசையம்பதியை நோக்கிச் சுந்தரர் சென்றகாலை
நெடிய விண்ணுேங்கும் சோலை நெருங்கிய அடவிசார்ந்து
கடிமிகக்கொண்டு தேர்ந்து கைலையங்கடவுட்போற்றி
கொடிவழி பார்த்துச் சென்ருர் கோவணன் தோழர்மாதோ.

கதிரவன் நுழைய வொண்ணுக் காட்டிலே போகுமாறு
நதியணி கடவுட் டோழன் நம்பியாரூரன் காணு
தெதிரதியாரு நேரா தெம்பிரான் றன்னை நோக்கித்
துதியெடுத்தியம்பலும்மே தொண்டருக் கெளியனன்று.

சொல்லருங்கிராத வேடந்துணைவியும் தானுங்கொண்டு
மெல்லவே நடந்துவந்து மேநினி புகழவன்று
ஒல்லுநர் தம்மை நோக்கி யுயங்குத லொழித்தி என்று
வல்லுரந்தன்னினல்ல வழிதனைக் காட்டியாங்கே.

தொல்வினை தீர்க்குமூதூர் துடிசையம்பதியி னெல்லை
எல்லையே வந்துசேர உம்பருக் கரியனன்று
வல்லபையோடும் வானில் மறைதலும் வாகனழ்ந்து
தொல்மறை பாடியாடித்துடிசையை நண்ணிஞரால்

என்பது துடிசை புராணம்.

சிங்கடியப்பர் சோழநாட்டின் தலைநகராகிய திருவாரூரினின்றும் மூன்றுமுறை கொங்குநாட்டிற்கு வந்துள்ளார்.

முதல் தடவை வந்தபோதுதான் கொடுமுடி—துடிசை காஞ்சிவாய்ப்பேரூர் முதலிய தலங்களை நாவலூரர் பாடிப் பரவியது.

இரண்டாம்முறை வந்தபோதுதான் சேரமான் பெருமானிடம் பொருள்பெற்றுத் திருமுருகன் பூண்டியில் கொள்ளை கொடுத்தது.

மூன்றும்முறை சென்றபோதுதான் அவிநாசியின்கண் முதலைவாய்ப்பிள்ளையை அழைப்பித்துவிட்டு, திருவஞ்சிக்களம் சென்று சேரமான் பெருமாளுடன் திருக்கைலை சென்றது.

வனப்பகையப்பருக்குத் திருத்துடிசையம்பதியில் சிவபெருமான்வேடஉருவமாகக் காட்சிகொடுத்ததைச் சுந்தரமூர்த்தி நாயனார் பிள்ளைத் தமிழில்

சேணூர்புரிசை அவிநாசி சேவித்தகன்று துடிசைநகர்
சேரும் வழியாங் கானகத்தில் செல்லற்கியையாதே மயங்கக்
கோணுகினைப் பூணணியாகக் கொண்டான் அமலையொடும்வேடர்
கோலங்காட்டி வழிதெரித்துக்கூட்டிக் கோயில்வந்தருளிச்
சேணாரமுதை நிகரடிசில் சிறக்குமுருங்கையிலைக்கறியும்
செறியும் சுவைய பல்லுணவும் சேருங்கணத்தாலிடவுண்ட
மாணூர் நாவலூராள மன்னா வருகவருகவே
மல்குபெருஞ்சீர் புல்குகின்ற மறையோன் வருகவருகவே

என்று கூறப்பட்டிருக்கிறது.

இன்னும் கொங்குமண்டல சதகத்தில் இவ்விடயத்தை

வேட்டுவ வேடமெடுத்து வழித்துணை மேவியிளங்
காட்டு முருங்கையிலை காய் நெய்பெய்து கறி சமைத்துப்
பாட்டுமுழக்கு வன்றொண்டருக்கு அன்னம்படைத்து நரை
மாட்டுதிப்போன் துடிசைப்பதியுங் கொங்குமண்டலமே.

என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

பார்த்தனுக்கு வேடரூபங்காட்டிப் பாசுபதங்கொடுத்ததை பல இடங்களில் பாடும் நம் சடையன் சிறுவர் தமக்கு அவ்வேடுவ உருவக்காட்சியினைக் காட்டி மறைந்தபொழுது பதிகம் பாடாமல் இருப்பாரா? இருக்கமாட்டார். ஆகையால் துடிசையம்பதித் தேவாரம் இருந்து இறந்தபோயிற்று என்று கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆனல் இவ்வரிய பெரிய காட்சியானது சிங்கடியப்பர் மனதை விட்டகலாது நின்றது என்பதற்கு அத்தாட்சியாக அவர் திருவாழ்கொளிபுத்தூர் தேவாரத்தில் பாடிவைத்திருப்பதைக் கண்டு தெரிந்துகொள்ளலாம்.

இம் மாதிரி நம்நாயனர் பேரூரில் கண்டகாட்சியினை சிதம்பரத்தில் கண்டு “ பாரூரும் ” என்ற பதிகத்தில் பாடியுள்ளார்.

திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் திருக்கோல தரிசனம் திருவாவடுதுறையில் காட்டக்கண்டு

குறைவிலா நிறைவே குணக்குன்றே
கூத்தனே குழைக்காதுடையானே
உறவிலே னுனையன்றி மற்றடியேன்
ஒருபிழை பொறுத்தா லழிவுண்டோ
சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்ச்
செம்பொனே திருவாவடுதுறையுள்
அறவனே எனையஞ்சலென்ற ருளாய்
யாரெனக்குற வமரர்களேறே.

என்று பாடியிருக்கிறார்.

ஆகையால், இவ்வாறு ஓரிடத்தில் கண்ட காட்சியை இன்னொரு இடத்தில் கண்டு பாட்டில் அமைத்து பாடுவது நமது நாயனருக்கு இயற்கை. அதுபோலவே துடிசைப்பதியில் தமக்குக்காட்டிய வேட்டுவக் கோலத்தை திருவாழ்கொளிபுத்தூர் என்னும் தலத்தில் காட்டக்கண்டு அவ்வூர் பதிகத்தில் வைத்துப்பாடியுள்ளார்.

இதுவரை இச்சரித்திரம் வெளிபாகாததால் அதனை ஈண்டு இன்று கூறுவான புக்கேம.

மேற்காட்டிய "திருவிளையசராகிய" என்ற பாடலுக்குப் பல பேர் பலவிதமாகப் பொருள்கொள்ளினும், எது சரித்திரத்திற்கும் அறிவிற்கும் பொருத்தமோ அதனைக் கொள்ளவேண்டும்.

ஆகையால் "சிங்கடியப்பனும் செங்கண்வேடனும்" என்ற தொடர்மொழியானது ஒரு சிறந்த சரித்திரத்தை உட்கொண்டது என்றும், நம்பி ஆரூரர் தமது மனதில் பதித்துள்ள சிவபெருமானுடைய மூன்று திருவுருவங்களில் "செங்கண்வேடக் கோலம்" ஒன்றென்றும், மூன்று திருவுருவங்கள் என்னவெனறால் 'செங்கண்வேடக்கோலம் ஒன்று—திருவாரூர் தியாகேசர் கோலம் இரண்டு காஞ்சிவாயப்பேரூர் நடராஜப்பெருமானுடைய திருவோலக்கம் மூன்று என்றும் இதுகாறும் கூறியவற்றால் கண்டாம்.

"உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலிவேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்."

தண்டமிழ் நாடு வாழ்கத் தமிழரும் வாழ்க வாழ்க
கண்டையும் கைக்கச்செய்து கனியினும் மிகவினிக்கும்
ஒண்டமிழ் என்னும் செய்ய உயர்தனிமொழியும் வாழ்க
அண்டரும் போற்றுகின்ற அருஞ்சைவ சமயம் வாழ்க.

(முற்றும்)

# துடிசைகிழார் அ. சிதம்பரனாரால்
## வெளியிடப்பட்ட நூல்கள்.

—— : 0 : ——

ஒழுக்கநூற் பிரிவு.

| | | | | |
|---|---|---|---|---|
| No. 1 | விபூதி விளக்கம் | 0 | 2 | 0 |
| ,, 2 | உருத்திராக்க விளக்கம் | 0 | 4 | 0 |
| ,, 3 | நித்திய கரும விளக்கம் | 0 | 4 | 0 |
| ,, 4 | மாகேசுர பூஜை விளக்கம் | 0 | 4 | 0 |
| ,, 5 | இங்கித மணவியல் | 0 | 6 | 0 |
| ,, 6 | ஆனந்து | 0 | 6 | 0 |

ஞானநூற் பிரிவு.

| | | | | |
|---|---|---|---|---|
| No. 1 | சிவஞானபோத முதனூல் விளக்கம் | 0 | 8 | 0 |
| ,, 2 | தம்பிரான் தோழர் தவவாழ்க்கை | 0 | 4 | 0 |
| ,, 3 | சிவலிங்க உருவ விளக்கம் | 0 | 8 | 0 |

வரலாற்று நூற்பிரிவு.

| | | | | |
|---|---|---|---|---|
| No. 1 | துடிசைப்புராணம் | 0 | 8 | 0 |
| ,, 2 | தமிழ் மொழிச் சிறப்பு | 0 | 2 | 0 |
| ,, 3 | சித்தவைத்திய சரித்திரம் | 0 | 4 | 0 |
| ,, 4 | நெற்குன்ற வாணர் சரித்திரம் | 0 | 4 | 0 |

## பென்ஷன் டிப்டி சூப்பரண்டேண்டு
## சைவஸ்ரீ C. S. சுந்தர முதலியாரால்
## வெளியிடப்பட்ட நூல்கள்.

—— : 0 : ——

| | | | | |
|---|---|---|---|---|
| No. 1 | அண்டபிண்ட சமத்துவ விளக்கம் | 0 | 3 | 0 |
| ,, 2 | சுந்திரமூர்த்தி நாயனார் மான்மியம் | 0 | 2 | 0 |
| ,, 3 | திருமந்திரம் உபதேசப்பகுதி | 0 | 8 | 0 |

கிடைக்குமிடம் :—

1 தம்பிரான் தோழர் தமிழ்ச்சங்கம்,
திருவாரூர். (தஞ்சை ஜில்லா)

2. கோவைத் தமிழ்ச்சங்கம்,
வைசியாள் வீதி, கோயம்புத்தூர்.